வேல்முருகன்



செய்த உள்ளடி வேலைதான் இப்படிக் கட்சித் தேர்தலை நடத்தாமல்விட்டது. எங்கள் ஐயாவுக்கு நம்பிக்கையாக இருந்தவர்கள்கூட இந்த உள்ளடியில் சிக்கி சின்னாபின்னமாகி வீட்டில் முடங்கத் தொடங்கவிட்டனர். நிர்வாகிகள் விஷயத்தில் தொடங்கி அனைத்து விஷயங்களிலும் எங்கள் ஐயாவே முடிவெடுத்தபோது கட்சி கட்டுக்கோப்பாக இருந்தது. அவர் அடுத்தவர்களிடம் எப்போது பொறுப்பை ஒப்படைத்தாரோ, அப்போதிலிருந்து கட்சி அழிவுப் பாதைக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது" என்று புலம்பித் தீர்த்தார்.

மாவட்டம், ஒன்றியம் உள்ளிட்ட பதவிகள் அனைத்திலும் நிர்வாகிகளை நியமித்து முடித்தாகிவிட்ட நிலையில், தற்போது கட்சியின் முக்கியத் தளபதிகள் சிலர் கட்சிக்குள் தங்களுக்கென ஒரு படையைத் திரட்டி வருகிறார்கள் என்று நம்மிடம் பேசினர் மாநிலப் பொறுப்பாளர்கள் சிலர். எதற்குப் படை திரட்டுகிறார்கள்? நாம் மாநிலப்பொறுப்பாளர்களில்ஒருவரிடம்நைஸாகப் பேச்சுக் கொடுத்தோம். அவர், "பா.ம.க.வின் கீழ்மட்டப் பொறுப்புகள் அனைத்திலும் நியமனம் முடிந்துவிட்டது. அடுத்து கட்சியின் மாநிலப் பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டிய கட்டாய நிலை வந்துவிட்டது. வரும் 30ஆம் தேதி கூடவுள்ள செயற்குழு, பொதுக் குழுவில் நிச்சயம் மாநில நிர்வாகிகளை அறிவிப்பார்கள். அதற்காகத்தான் படை திரட்டும் வேலையைப் பக்காவாக செய்து கொண்டிருக்கின்றனர். கட்சியின் அமைப்பு செயலாளர் வேல்முருகனுக்கு நீண்ட நாட்களாகத் தலைவராக வேண்டும் என்ற எண்ணம். அதற்கான சந்தர்ப்பம் இப்போது உருவாகி இருப்பதாக அவர் நினைக்கிறார். பென்னாகரம் இடைத்தேர்தலை அதற்குசாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார் வேல்முருகன். சிட்டிங் தலைவர் ஜி.கே. மணிக்கோ 'பதவி போனால் நாம்மாஜி அரசியல்வாதியாகத்தான் இருக்க முடியும்' என்ற இக்கட்டான நிலை. காடுவெட்டி குருவுக்கோ வன்னியர் சமுதாயம் சார்ந்த தன் செல்வாக்கை தூக்கி நிறுத்த கட்சிக்குள் தனக்கான ஆதரவாளர் பட்டாளம் வேண்டும் என்று தனி லிஸ்டை ரெடி பண்ணிக் கொண்டிருக்கிறாராம். இப்படி அவரவர் ஒரு கணக்கோடு காய் நகர்த்தத் துவங்கியுள்ளனர். தற்போது மற்ற கட்சிகளை விட பா.ம.க.வில் அதிகமாகவே உள்ளது கோஷ்டி பாலிடிக்ஸ்" என்றவரிடம், "சரி யார் யார் படை திரட்டியுள்ளனர்?" என்று ஒரு குறுக்குக் கேள்வியைப் போட்டோம்.



ஜி.கே.மணி



காடுவெட்டி குரு

அதற்கு அந்த மாநில நிர்வாகியோ, "இதில் முதலிடத்தைப் பிடித்திருப்பது வேல்முருகன்தான். கடலூர் மாவட்டத்தில் காடுவெட்டி குருவின் ஆதரவாளர்கள் ஏற்கெனவே வேல்முருகன் அணிக்குத் தாவிவிட்ட நிலையில் குருவின் பெயர் சொல்லவாவது இருந்தது இருவர். ஒருவர் திருஞானம். இன்னொருவர் ராயநல்லூர் கண்ணன்! இப்போது இவர்களையும் தூக்கியடித்துவிட்டனர். அதே நேரம் சுபா. இளவரசனின் முக்கியமான நண்பர் வேல்முருகனின் அண்ணன் திருமாவளவன். காடுவெட்டி குருவுக்கு இன்று வரை நேர் எதிரியாக இருந்து வருவது சுபா. இளவரசன்தான். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சுபா. இளவரசனுடனான நட்பு பற்றி ஐயாவிடம் வந்து புலம்பினார் காடுவெட்டியார். அப்போது வேல்முருகனின் அண்ணன் திருமாவளவனிடமிருந்த அனைத்துக் கட்சிப் பொறுப்புகளையும் பிடுங்கிவிட்டார் ஐயா. அப்போது வேல்முருகன்கூட அதிருப்தியில் தைலாபுரத்துக்கு வராமல் அடம்பிடித்தார். பிறகு ஐயாவே வேல்முருகனை சமாதானப்படுத்தினார்.

அதே திருமாவளவனுக்குதான் இன்று மாநில துணை பொதுச் செயலாளர் பதவியை வாங்கி தந்திருக்கிறார் வேல்முருகன். ஆக கடலூர் மாவட்டத்தில் காடுவெட்டி குருவின் க்ரூப் என்று யாரும் இல்லாத அளவிற்கு நிர்வாகிகள் பட்டியலில் புகுந்து விளையாடி விட்டார் வேல்முருகன்" என்றார்.

இன்னொரு மாநில நிர்வாகியோ, "விழுப்புரம் மாவட்டத்தில் ஜி.கே. மணியின் ஆரம்ப கால நண்பரான தங்கஜோதி அணியை சுத்தமாக ஓரங்கட்டிவிட்டு காடுவெட்டி குருவின் எதிரணியாக இருக்கும் கலிவரதன் எம்.எல்.ஏ.வை மாவட்டச் செயலாளராக்கி விட்டனர். கலிவரதன், வேல்முருகன் அணி. அதேபோல் எங்கள் ஐயாவுக்கு செல்லப்பிள்ளையாக இருந்த விழுப்புரம் மாவட்டச் செயலாளர் அன்புவை தூக்கிவிட்டு புது அரசியல்வாதியான ரவி அலெக்ஸை மாவட்டச் செயலாளராக்கியுள்ளனர். இவர் மீது பல வழக்குகள் உள்ளன. இவரை சிபாரிசு செய்தது எங்கள் ஐயாவின் தம்பி சீனுக்கவுண்டர். ஆக விழுப்புரம் மாவட்டத்திலும் வேல்முருகன் அணி